**நவம்பர் – 23**

# TNPSC துளிகள்


- 14வது இளையோர் தேசிய ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டியில் ஒடிசா அணியானது, இரண்டு முறை சாம்பியன் பட்டம் வென்ற ஹரியானா அணியினை வீழ்த்தி தனது முதல் தங்கப் பதக்கத்தினை வென்றது.
- பெங்களூருவில் BIMSTEC ஆற்றல் மையத்தினை அமைப்பதற்கான ஒரு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.
- சத்தீஸ்கரில் உள்ள குரு காசிதாஸ்-தாமோர் பிங்லா இந்தியாவின் 56வது புலிகள் வளங் காப்பகமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- தேசியப் புலிகள் வளங்காப்பு ஆணையம் (NTCA) ஆனது, நுகு வனவிலங்குச் சரணாலயத்தினை பந்திப்பூர் புலிகள் வளங்காப்பகத்தின் மைய மற்றும் முக்கியப் பகுதியாக அறிவிக்கப் பரிந்துரைத்துள்ளது.
- ஒடிசாவின் டெப்ரிகர்ஹ் வனவிலங்கு சரணாலயத்தில் நடத்தப்பட்ட முதல் விலங்குகள் கணக்கெடுப்பில், அங்கு குறைந்தது 659 இந்தியக் காட்டெருமைகள் இருப்பதாகக் கணக்கிடப் பட்டுள்ளது.
- நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்பு நிலை (AMR) பற்றிய 4வது அமைச்சரக உயர்மட்ட உலகளாவிய மாநாடு ஆனது சவூதி அரேபியா பேரரசின் ஜெட்டா என்னுமிடத்தில் நடைபெற்றது.
- ஐக்கியப் பேரரசில் உள்ள QS அமைப்பின் உலகப் பல்கலைக்கழகத் தரவரிசையின் நிர்வாக இயக்குனர் டாக்டர் அஷ்வின் பெர்னாண்டஸ், 'Modialogue: Conversations for a Viksit Bharat' என்ற புத்தகத்தினை எழுதியுள்ளார்.
- சர்வதேச ஆண்கள் தினம் ஆனது ஆண்டுதோறும் நவம்பர் 19 ஆம் தேதியன்று கொண்டாடப் படுகிறது.
- இந்தியாவைச் சேர்ந்த ரேச்சல் குப்தா, 2024 ஆம் ஆண்டிற்கான முதல் மிஸ் கிராண்ட் இன்டர்நேஷனல் பட்டத்தினை வென்ற முதல் இந்தியர் ஆவார்.
  - இவர் இந்தப் புகழ்பெற்றப் பட்டத்தை வென்ற மூன்றாவது ஆசிய நாட்டவர் ஆவார்.

# தமிழ்நாடு செய்திகள்


## அதிக எண்ணிக்கையிலான பெண் உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள்

- மாநிலங்களிலேயே தமிழகத்தில் தான் அதிக எண்ணிக்கையிலான பெண் மன்ற உறுப்பினர்கள் (கவுன்சிலர்கள்) உள்ளனர்.
- இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, உத்தரப் பிரதேசம், கேரளா, பீகார் மற்றும் சத்தீஸ்கர் ஆகிய சில மாநிலங்கள் இந்த எண்ணிக்கையின் அடிப்படையில் முதல் 10 இடங்களில் உள்ள மற்ற மாநிலங்கள் ஆகும்.
- இந்தியாவில் 17 மாநில அரசுகளானது, அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப் பட்டு உள்ள குறைந்தபட்சம் 33% இட ஒதுக்கீட்டிற்கும் மேலாகப் பெண்களுக்கு 50% இட ஒதுக்கீட்டினை வழங்குவதற்கான சட்டத்தினை இயற்றியுள்ளன.
- இந்தியாவில் உள்ள உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களில் சுமார் 46% பேர் பெண்கள் ஆவர்.

- பாட்னா, சிம்லா, ராஞ்சி மற்றும் புவனேஸ்வர் உட்பட, செயல்பாட்டில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளைக் கொண்ட 21 தலைநகரங்களுள் 19 தலைநகரங்களில், இந்த எண்ணிக்கை 60 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது.




## பொது விநியோகத் திட்டத்தில் அரிசி இழப்பு




- 2022-23 ஆம் ஆண்டில் பொது விநியோகத் திட்டத்தின் (PDS) அரிசி விநியோகத்தில் ஏற்பட்ட இழப்புகளால் (சரக்குப் போக்குவரத்தின் போது வீணாகும் அரிசிகள் மற்றும் கள்ளச் சந்தையில் விற்கப்படும் அரிசிகள்) தமிழ்நாடு அரசிற்கு சுமார் 1,900 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- இவ்வாறு வீணான 5.2 லட்சம் டன் அளவிலான அரிசிகளானது பொது விநியோகம் (PDS) மூலம் வழங்கப்பட வேண்டிய மொத்த அரிசியின் அளவில் 15.8% பங்கினைக் கொண்டு உள்ளதாகக் கூறப்படுகிறது.
- ஆண்டிற்கான அரிசியின் பொருளாதாரச் செலவினம் குவிண்டாலுக்கு 3,670 ரூபாய் ஆகும்.

- பொது விநியோகத்தின் போது இழக்கப்பட்ட PDS அரிசியின் அளவு சுமார் 21.67 லட்சம் குடும்பங்களுக்கு உணவளிக்கப் பயன்பட்டிருக்கும்.
- 2024 ஆம் ஆண்டு மே 31 ஆம் தேதியன்று நிலவரப்படி, தமிழ்நாட்டில் சுமார் 2.2 கோடி அரிசிகளைப் பெறும் குடும்ப அட்டைகள் உள்ளன.

## தமிழ்நாடு மாநிலத்தின் முதலீட்டு தேவை

- தமிழக மாநில அரசு ஆனது, 16வது நிதிக் குழுவின் தமிழ்நாடு மாநில வருகையின் போது அதற்கான குறிப்பாணையை ஒப்படைத்துள்ளது.
- தமிழ்நாட்டின் முதலீட்டுத் தேவையானது 6.84 லட்சம் கோடி ரூபாயாக உள்ளது.
- மேலும், நகர்ப்புறங்களில் உள்ள உள்கட்டமைப்பு தேவைகள் 5.32 லட்சம் கோடி ரூபாய் ஆகும்.
- மின்துறைக்கான நிதித் தேவையானது சுமார் 62,000 கோடி ரூபாயாகவும், தொழில் மயமாக்கலுக்கான முதலீட்டுத் தேவை 43,600 கோடி ரூபாயாகவும் இருந்தது.
- பேருந்துகள் மற்றும் பொதுப் போக்குவரத்து அமைப்புகளின் நவீனமயமாக்கலுக்கு 7,000 கோடி ரூபாயும் தேவை.
- கடல் சார் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக என்று, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் நீர்நிலைகளை மீட்டெடுப்பதற்கான நிதி ஆதரவு தலா 5,000 கோடி ரூபாய் ஆக குறிப்பிடப்பட்டது.





## பசுமை ஆற்றல் வழித்தடத் திட்டம்-II

- மத்திய மின்சார ஆணையம் (CEA) தேசிய மின் பகிர்மானத் திட்ட அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இரண்டாம் கட்ட பசுமை ஆற்றல் வழித்தடத் திட்டத்தின் (GEC-II) கீழ் தமிழ்நாட்டிற்கு 719.76 கோடி ரூபாய் செலவில் மின் பகிர்மானக் கட்டமைப்பினை அமைக்க திட்டமிடப் பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், சுமார் 19 ஜிகாவாட் (GW) அளவிலான புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறன் ஆனது மாநிலங்களுக்குள் பகிர்மான அமைப்பில் ஒருங்கிணைக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில், கூடுதலாக சுமார் 4,000 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன்

உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- இது 624 சுற்று கிலோமீட்டர்கள் (CKM) அளவிலான மின் பகிர்மான வடங்கள் மற்றும் 2,200 துணை மின்நிலையங்களை (MVA) இலக்காகக் கொண்டுள்ளது.
- பசுமை ஆற்றல் வழித்தடம்-I (GEC-I) என்ற திட்டத்தின் கீழ், சுமார் 23 GW அளவிலான புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறன் என்பது உள்-மாநில வலையமைப்புகளுடன் நன்கு ஒருங்கிணைக்கப் பட திட்டமிடப்பட்டது.
- சுமார் 18.72 ஜிகாவாட் (31 மார்ச், 2024 வரை) திறன் ஆனது வலையமைப்புடன் நன்கு ஒருங்கிணைக்கப் பட்டது.




# தேசியச் செய்திகள்


## இந்தியாவின் புதிய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர்




- மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரி K.சஞ்சய் மூர்த்தி, இந்தியாவின் புதிய தலைமை கணக்குத் தணிக்கை அதிகாரியாக (CAG) நியமிக்கப்பட்டுள்ளார்.

- அவரது பதவிக்காலம் 2024 ஆம் ஆண்டு நவம்பர் 20 ஆம் தேதியன்று முடிவடைகிறது.
- இந்திய அரசியலமைப்பின் 148வது சரத்தின் (1) வது பிரிவு ஆனது CAG அதிகாரியினை நியமிப்பதற்கான அதிகாரத்தினைக் குடியரசுத் தலைவருக்கு அளித்துள்ளது.

## நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் குறித்த CAG அறிக்கை




- 74வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் ஆனது, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மூலம் குடிமக்களுக்கு நேரடியாகவும் திறம்படவும் சேவைகளை வழங்க முடியும் என்பதால் அவற்றிற்கான அதிகாரப் பகிர்வைக் கட்டாயமாக்கியது.
- பாராளுமன்றமானது அரசியலமைப்புச் சட்டத்தினைத் திருத்தியமைத்த சுமார் 30 ஆண்டுகளுக்குப் பிறகும், 18 மாநில அரசுகள் இதனை முழுமையாகச் செயல்படுத்த வில்லை.
- 18 நகராட்சி செயல்பாடுகளில் 17 செயல்பாடுகள் ஆனது அரசியல் சட்டப்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு (ULSGs) மாற்றப்பட்டுள்ளன.
- ஆனால் நான்கு செயல்பாடுகள் மட்டுமே முழுமையான ஒரு சுயாட்சியுடன் திறம்பட வழங்கப் பட்டுள்ளன.
- 14 மாநிலங்களில் சுமார் பத்து மாநிலங்கள் ஆனது, 16 காரணிகளுள் ஐந்திற்கும் மேற்பட்டவை தொடர்பாக ULSG அமைப்புகளின் மீது மேலாதிக்க அதிகாரங்களைக் கொண்டுள்ளன.
- 17 மாநிலங்களில் உள்ள சுமார் 2,625 ULSG அமைப்புகளில் 1,600 அமைப்புகளில் செயல் பாட்டில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சபைகள் இல்லை, மேலும் ஐந்து அமைப்புகளில் மட்டுமே மேயர்களை நேரடியாகத் தேர்ந்தெடுத்துள்ளனர்.
- 14 மாநிலங்களில் ஆறு மாநிலங்கள் தங்கள் நகர சபை இடங்களில் பெண்களுக்கு 50% இட ஒதுக்கீட்டினை வழங்கியுள்ள நிலையில் இது அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டு உள்ள 33% இடஒதுக்கீடு வரம்பினை விஞ்சுகிறது.
- 15 மாநிலங்களில் சுமார் நான்கு மாநிலங்கள் மட்டுமே தங்கள் மாநிலத் தேர்தல் ஆணையங்களுக்கு (SEC) வட்டார (பிரிவு) மறுசீரமைப்பிற்கு அதிகாரம் அளித்துள்ளன.
- நகராட்சி அமைப்புகள் ஆனது, நிதிக்காக மத்திய மற்றும் மாநில அரசுகளை பெரிதும் சார்ந்துள்ளது.
- சராசரியாக, ULSG அமைப்புகளின் மொத்த வருவாயில் சுமார் 32% மட்டுமே அவற்றின் சொந்த வருவாயாக இருந்தது.
- அவற்றின் செலவினத்தில் சுமார் 29% மட்டுமே மேம்பாட்டுப் பணிகள் மற்றும் நலத்

திட்டங்களுக்கு செலவிடப்பட்டுள்ளன.

- அவற்றின் சராசரி வருவாய் ஆதார- செலவின இடைவெளியானது 42% ஆகும்.
- சுமார் பத்து மாநிலங்கள் மட்டுமே நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவின்படி மாநில நிதி ஆணையங்களை அமைத்துள்ளன.

## துரோணகிரி நடவடிக்கை

- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது துரோணகிரி நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.
- இது 2022 ஆம் ஆண்டு தேசியப் புவியியல் (இடஞ்சார்ந்த) கொள்கையின் கீழான ஒரு சோதனைத் திட்டமாகும்.
- குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும் வணிகம் செய்வதை நன்கு எளிதாக்குவதிலும் புவிசார் தொழில்நுட்பங்கள் மற்றும் பல புத்தாக்கங்களின் மீதான சாத்தியமான பயன்பாடுகளை எடுத்துக் காட்டுவதை இது ஓர் நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- வேளாண்மை, வாழ்வாதாரம், தளவாடங்கள் மற்றும் போக்குவரத்து ஆகியவற்றில் கவனம் செலுத்தும் முதல் கட்ட நடவடிக்கையானது உத்தரப் பிரதேசம், ஹரியானா, அசாம், ஆந்திரப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய சில மாநிலங்களில் மேற் கொள்ளப் பட உள்ளது.




## GRAI 2023

- 2023 ஆம் ஆண்டு குறை தீர்ப்பு மதிப்பீடு மற்றும் குறியீடு (GRAI) ஆனது நான்கு பரிமாணங்கள் மற்றும் 11 குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டது.
- இது மத்திய அமைச்சகங்கள் மற்றும் துறைகளால் மேற்கொள்ளப்படும் குறை தீர்ப்பு வழிமுறைகளை மதிப்பிடுகிறது.
- இது நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் பொது குறைகள் துறையினால் (DARPG) கருத்துருவாக்கம் செய்யப்பட்டு உருவாக்கப்பட்டது.
- இந்தத் தரவரிசையின் குரூப்-A பிரிவில் வேளாண்மை மற்றும் விவசாயிகள்

நலத்துறையானது முதலிடத்தைப் பிடித்தது. அதைத் தொடர்ந்து தபால் துறை இடம் பெற்றுள்ளது.

- குரூப் B பிரிவில் இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கை அலுவலகமானது முதல் இடத்தினைப் பிடித்தது அதனைத் தொடர்ந்து நில வளத் துறை இடம் பெற்றுள்ளது.

| # | | Rank 1 | Rank 2 | Rank 3 |
|---|---|---|---|---|
| **Group A: Grievances > 10,000** | **Composite** | **Department of Agriculture and Farmers Welfare** | **Department of Posts** | **Ministry of Cooperation** |
| | Efficiency | Ministry of Cooperation | Department of Telecommunications | Ministry of Labour and Employment |
| | Feedback | Department of Agriculture and Farmers Welfare | Central Board of Direct Taxes (Income Tax) | Department of Defence |
| | Domain | Unique Identification Authority of India | Ministry of Home Affairs | Ministry of Cooperation |
| | Organisational Commitment | Department of Posts | Department of Telecommunications | Ministry of Corporate Affairs |

# சர்வதேசச் செய்திகள்

## G20 ரியோ உச்சி மாநாடு 2024

- ரியோ டி ஜெனிரோ நகரில் நடைபெற்ற 19வது G20 உச்சி மாநாடு ஆனது ரியோ பிரகடனத்தை ஏற்றுக் கொண்டதுடன் நிறைவு பெற்றது.
- பிரேசில் நாட்டின் தலைமையின் கீழ் நடைபெற்ற இந்த ஆண்டு G20 உச்சி மாநாட்டின் கருத்துரு, 'Building a Just World and a Sustainable Planet' என்பதாகும்.
- UNFCCC கட்டமைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சில முன்னேற்றங்கள் மற்றும் பாரீஸ் உடன்படிக்கைக்கான G20 நாடுகளின் ஒரு பெரும் உறுதிப்பாட்டை இந்தப் பிரகடனம் மீண்டும் உறுதிப் படுத்தியுள்ளது.
- இந்தப் பிரகடனமானது, அனைத்து வடிவங்களிலுமான தீவிரவாதத்திற்குக் கண்டனம் தெரிவித்துள்ளது.
- அஜர்பைஜானின் பாகு என்னுமிடத்தில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பருவ நிலை பேச்சுவார்த்தையானது பல சிக்கல்களைத் தீர்க்க தவறியது குறித்து இந்த உச்சி மாநாடு எடுத்துக்காட்டியது.
- உலகளாவியச் சமத்துவமின்மையை நிவர்த்தி செய்வதற்காக பில்லியனர்களுக்கு வரி விதிக்குமாறு பிரேசில் முன்மொழிந்தது.
- 2030 ஆம் ஆண்டில் சுமார் 500 மில்லியன் மக்களுக்கு உணவு வழங்குவதை இலக்காகக் கொண்டு வறுமை மற்றும் பட்டினி நிலைக்கு எதிரான உலகளாவிய கூட்டணியையும்

இது தொடங்கியுள்ளது.

- இந்த நிகழ்வின் போது ஜோ பிடன் அமேசான் காட்டிற்கு பயணம் மேற்கொண்ட முதல் அமெரிக்க அதிபர் என்ற பெருமையினைப் பெற்றார்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## காவ் பேங் முதலை




- வியட்நாமின் மலைப் பாங்கான இடத்தின் பண்ணைப் பகுதிகளில் முதலை போன்ற உயிரினம் ஒன்று கண்டறியப்பட்டுள்ளது.

- இந்த உயிரினம் ஆனது நீண்ட கால்கள் கொண்ட ஒரு புதிய முதலை இனமாக கூறப் படுகிறது.
- இந்தப் புதிய இனத்திற்கு டைலோட்டோடிரிட்டான் கோலியென்சிஸ் அல்லது காவ் பேங் என பெயரிடப் பட்டுள்ளது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## நிலையான வர்த்தகக் குறியீடு 2024

- நியூசிலாந்து நாடு தொடர்ந்து மூன்றாவது முறையாக 'மிகவும் நிலையான வர்த்தகப் பொருளாதாரம்' என்ற நிலையினைத் தக்கவைத்துள்ளது.
- அதைத் தொடர்ந்து ஐக்கியப் பேரரசு மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவை இடம் பெற்று உள்ளன.
- இதில் அமெரிக்கா 10வது இடத்திலும், இந்தியா 23வது இடத்திலும் உள்ளன.


| Rank | Economy | Overall | Economic | Societal | Environmental |
|---|---|---|---|---|---|
| 1 | New Zealand | 100 | 86 | 100 | 100 |
| 2 | United Kingdom | 97.7 | 87.8 | 93.7 | 99.4 |
| 3 | Australia | 87.4 | 75.4 | 99.6 | 83.2 |
| 4 | Singapore | 85.7 | 92.4 | 87 | 75.2 |
| 5 | Japan | 81.5 | 72.2 | 81.9 | 91.2 |
| 6 | South Korea | 81.4 | 92.2 | 85.4 | 67.4 |
| 7 | Hong Kong | 81.4 | 100 | 65.8 | 79.2 |
| 8 | Canada | 80 | 81.1 | 99.8 | 61 |
| 9 | Taiwan | 72.3 | 76.7 | 87.1 | 61.2 |
| 10 | United States of America | 72.2 | 90 | 69.4 | 65.3 |

# முக்கிய தினங்கள்


## தேசிய வலிப்பு நோய் தினம் - நவம்பர் 17

- இது உலகளவில் மில்லியன் கணக்கானவர்களை பாதிக்கும் ஒரு நரம்பியல் கோளாறு - வலிப்பு நோய்- பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது அறிவியல்பூர்வ புரிதல் மற்றும் அனுதாபத்தினை ஊக்குவிக்கும் அதே வேளையில் வலிப்பு நோய் தொடர்புடைய தவறான கருத்துக்கள் மற்றும் தவறான எண்ணங்களை அகற்றுவதை இந்த நாள் வலியுறுத்துகிறது.
- உலகளவில், வலிப்பு நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஊதா தினம் (மார்ச் 26) கொண்டாடப்படுகிறது.

- உலகம் முழுவதும் சுமார் 50 மில்லியன் மக்கள் இந்த வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டு உள்ளனர்.




## தேசிய ஒருமைப்பாட்டுத் தினம் - நவம்பர் 19




- இது இந்தியாவின் முதல் பெண் பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் பிறந்த நாளைக் குறிக்கிறது.
- 'இந்தியாவின் இரும்புப் பெண்மணி' என்று பிரபலமாக அறியப்பட்ட இந்திரா காந்தி அவர்கள் 1917 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் தேதியன்று அலகாபாத்தில் பிறந்தார்.
- தேசிய ஒருமைப்பாட்டுத் தினம் 1985 ஆம் ஆண்டில் அதிகாரப் பூர்வமாக அறிமுகப் படுத்தப் பட்டது.
- இது நாட்டின் பன்முகத் தன்மையைக் கொண்டாடுவதோடு, தேசத்தின் மகத்தான ஒரு நன்மைக்காக ஒன்றாக இணைந்துப் பணியாற்றுவதன் பெரும் முக்கியத்துவத்தையும் அங்கீகரிக்கிறது.
- அவர் 1966 முதல் 1977 ஆம் ஆண்டு வரையிலும், மீண்டும் 1980 முதல் 1984 ஆம் ஆண்டில் அவரது சோகமான படுகொலை வரையிலும் நாட்டின் பிரதமராகப் பணியாற்றினார்.

- அவரது அரசியல் வாழ்க்கையானது ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்கான அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்பினைக் கொண்டு வரையறுக்கப்படுகிறது.

## 7வது இயற்கை மருத்துவ தினம் - நவம்பர் 18




- இயற்கை மருத்துவம் என்பது இயற்கையோடு இணைந்து ஆரோக்கியத்தை நன்கு மேம்படுத்தும் ஒரு தனித்துவமான மருத்துவ முறையாகும்.
- இந்த நாள் ஆனது, உடல்நலம் மூலம் தனிநபர்களை மேம்படுத்துவதற்கான அதன் ஒரு உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவதற்காக என்று 2018 ஆம் ஆண்டில் ஆயுஷ் அமைச்சகத்தினால் முதன்முதலில் அறிவிக்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Naturopathy for Healthy Aging and Longevity" என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## சமி, ஃபாரஸ்ட் ஃபின்ஸ் மற்றும் க்வென்ஸ் பழங்குடியினர்

- சிறுபான்மைக் குழுக்கள் மற்றும் பழங்குடியின மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட வரலாற்று அநீதிகளுக்காக நார்வே நாடாளுமன்றம் மன்னிப்புக் கோரியுள்ளது.
- ஸ்டார்டிங் எனப்படும் நார்வே நாடாளுமன்றமானது சமி, க்வென்ஸ் மற்றும் ஃபாரஸ்ட் ஃபின்ஸ் இனத்தவரிடம் மன்னிப்புக் கோரியுள்ளது.
- நார்வே அரசினால் நடத்தப்படும் உறைவிடப் பள்ளிகளில் சிறுபான்மை மொழிகளை தடை செய்த நிலையில் அரசானது 18 ஆம் நூற்றாண்டில் சில முழு கிராமங்களையும் வலுக்கட்டாயமாக இடமாற்றம் செய்ததோடு இது 1851 ஆம் ஆண்டு முதல் அதிகாரப் பூர்வ கொள்கையாகவே மாறியது.
- சமி மக்கள் நார்வே, சுவீடன், பின்லாந்து மற்றும் ரஷ்யாவைச் சேர்ந்தவர்கள்.
- அவர்கள் பாரம்பரியமாகவே கலைமான் மேய்ப்பு மற்றும் மீன்பிடித் தொழில்களைச் செய்பவர்கள்.
- க்வென்ஸ் பழங்குடியினர் வடக்கு நார்வேயில் பின்லாந்து வம்சாவளியைச் சேர்ந்த ஒரு சிறுபான்மை இனத்தவர் ஆவர்.
- அவர்கள் வரலாற்று ரீதியாக வலுக்கட்டாய ஒருங்கிணைப்பிற்கும், தங்களின் மொழி

இழப்பிற்கும் உள்ளாக்கப்பட்டனர்.

- ஃபாரஸ்ட் ஃபின்ஸ் என்பது பின்லாந்தைச் சேர்ந்த, நார்வே மற்றும் சுவீடன் நாடுகளில் குடியேறிய சிறுபான்மைக் குழுவாகும்.
- அவர்கள் பயிர்த் தாளடி எரிப்பு வேளாண்மை முறையினைக் கடைபிடித்தனர் என்ற ஒரு நிலையில் இவர்கள் பின்னர் ஒருங்கிணைப்புக் கொள்கைகளால் விளம்புநிலை பிரிவினர் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★